بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 07/04/2023 அன்று U.K - பைத்துல் ஃபு(த்)தூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த வழிகாட்டல்களின் ஒளியில் திருக்குர்ஆனுடைய அருள்கள், அந்தஸ்து, தகுதி மற்றும் மகத்துவம் குறித்து எடுத்துரைத்தல்**
*எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருக்கவும், உலகின் பொதுவான நிலைகளுக்காகவும், பாலஸ்தீன முஸ்லிம்களுக்காகவும் அருளுக்குரிய ரமலானில் துஆ செய்யுமாறு கவனமூட்டல்*

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது மார்க்கம் மற்றும் ஷரீஅத்தை அல்லாஹ் முழுமை செய்த போது, நிறைவு செய்த போது,

اَلۡیَوۡمَ اَکۡمَلۡتُ لَکُمۡ دِیۡنَکُمۡ وَ اَتۡمَمۡتُ عَلَیۡکُمۡ نِعۡمَتِیۡ وَ رَضِیۡتُ لَکُمُ الۡاِسۡلَامَ دِیۡنًا

என்று திருக்குர்ஆனில் இந்த அறிவிப்பை செய்தான். அதாவது, ''இன்றைய நாள் நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும், உங்களிடத்தில் என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும், உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை விரும்பியுள்ளேன்.''

ஆக, முஸ்லிம்களுக்கு ஒரு முழுமையான, நிறைவான ஷரீஅத்தை அல்லாஹ் வழங்கியிருப்பது முஸ்லிம்கள் மீது அல்லாஹ்வின் மிகப்பெரும் அருளாகும். இப்பொழுது இறுதி மார்க்கம் அல்லாஹ்வுக்கு விருப்பமான மார்க்கமாகிய இஸ்லாம் மட்டுமேயாகும். இந்த வாதம் இஸ்லாத்தின் வாதம் மட்டுமேயாகும். வேறு எந்த மார்க்கத்தினுடையதும் கிடையாது. அல்லாஹ்வின் விருப்பம் வேண்டுமென்றால் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர, அதன் போதனையின்படி செயல்படுவதைத் தவிர வேறு வழியில்லை! திருக்குர்ஆனுடைய போதனைதான் இப்போது மனிதனுடைய ஒழுக்க, ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஒரே வழியாகும் என்று அல்லாஹ் அறிவிப்பு செய்கின்றான். இன்னும் கூறுவதாயின், இந்தப் போதனை எந்த அளவுக்கு முழுமையானது என்றால், பௌதீக முன்னேற்றத்தின் வழிகளுக்கும் இந்தப் போதனை மட்டுமே உள்ளது.

இப்போதனையைக் குறித்து اَکۡمَلۡتُ நான் முழுமையாக்கியுள்ளேன் என்று அல்லாஹ் அறிவிப்பு செய்துள்ளான் என்றால், அதன் பொருளாவது, மனிதனுடைய அனைத்து விதமான திறமைகளும் - அவை ஒழுக்கம் சம்பந்தப்பட்டவையாக இருந்தாலும் சரி! ஆன்மீகமாக இருந்தாலும் சரி! அல்லது பௌதீகமாக இருந்தாலும் சரி! திருக்குர் ஆன் படி செயல்படுவதால் மட்டுமே அவை கிடைக்க முடியும். மேலும், اَتۡمَمۡتُ என்று கூறி

முழு ஆற்றலுடன் செய்துள்ள அறிவிப்பு என்னவென்றால், மனிதனுக்கு எவையெல்லாம் தேவையாக இருந்தனவோ அவற்றை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யக் கூடியது திருக்குர்ஆன் மட்டுமேயாகும். திருக்குர்ஆன் வரையறுக்காத எந்தவொரு தேவையும் (வெளியே) இல்லை. அவை மனிதனுடைய பௌதீக தேவைகளாக இருந்தாலும் சரி! அல்லது ஆன்மீக மற்றும் ஒழுக்க அந்தஸ்துகளை பெறுவதற்குரிய வழிமுறைகளாக இருந்தாலும் சரி!

இப்பொழுது மனிதன் எஞ்சியிருக்க இப்போதனையுடனேயே தொடர்பு கொள்ள வேண்டும் என்று இந்த வசனத்துடன் திருக்குர்ஆன் அறிவிப்பு செய்துள்ளது. மேலும், இப்போதனை எல்லாக் காலத்திற்கும் உரியதாகவும், முழு உலகில் உள்ள மனிதர்களுக்காகவும் உள்ளது. திருக்குர்ஆனுக்கு முன்பு பல்வேறு நபிமார்கள் மீது இறங்கிய அனைத்து போதனைகளும் தற்காலிகமானதாகவும், அந்த காலத்திற்கு ஏற்பவும் இருந்தன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதை விளக்குவதற்காக இவ்வாறும் அறிவிப்பு செய்துள்ளார்கள். அது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றியதன் நோக்கமும் நிறைவேறி விட்டது என்பது இதிலிருந்து நிரூபணமாகிறது. இந்த முழுமையான, இறுதியான நபி (ஸல்) அவர்கள் மீதுதான் இந்த முழுமையான அந்தஸ்தைக் கொண்ட ஷரீஅத் இறங்கியது! ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் செய்கின்ற ஆட்சேபனை என்னவென்றால், இந்தக் கொள்கை இருக்கும் போது, திருக்குர்ஆனை இறுதி ஷரீஅத்தாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறுதி நபியாகவும் ஒப்புக்கொள்ளும் போது பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாதத்திற்கு என்ன பொருள்? அவர்கள் இக்காலத்தில் வரவேண்டிய தேவைதான் என்ன? ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதற்கான பதிலை ஓரிடத்தில் இவ்வாறும் கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்: நீங்கள் இஸ்லாமிய போதனையின்படி அமல் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால், சரி! எனது வருகைக்கு எந்த தேவையும் இல்லை. ஆனால், காலத்தின் பொதுவான நிலையைப் பார்க்கும் போது, குறிப்பாக முஸ்லிம்களின் நிலையைப் பார்க்கும் போது கற்றுக் கொடுக்கும் ஒருவரின் தேவை உள்ளது என்பதை அது அறிவிக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சேவகத்தில் அன்னாருடைய ஷரீஅத், மார்க்கம் மற்றும் திருக்குர்ஆனுடைய போதனையை உலகில் பரப்பவே நான் வந்துள்ளேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தம் இலக்கியங்களிலும், எழுத்துக்களிலும், நூல்களிலும் எல்லா இடங்களிலும் இதை கூறியிருக்கிறார்கள். இந்தப் பணியைத்தான் அன்னார் செய்து முடித்தார்கள். மேலும், இதைத் தொடரச் செய்வதற்காகவே அஹ்மதிய்யா ஜமாஅத் நிலை நாட்டப்பட்டது. அன்னாருடைய இலக்கியங்கள், அன்னாரால் எடுத்துரைக்கப்பட்ட திருக்குர்ஆன் விளக்கவுரைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப இப்பணியை அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வருகிறது. இந்தக் குறிக்கோளை நாம் எந்த அளவுக்குப் பூர்த்தி செய்கிறோம் என ஒவ்வோர் அஹ்மதியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒட்டுமொத்த அளவில் நிகழ்ச்சிகள் உள்ளன. (அதனடிப்படையில்) இது நடக்கிறது. ஆனால், தனிப்பட்ட அளவிலும் இது நடக்க வேண்டும். நாம் இந்தக் குறிக்கோளை நம் முன்னால் வைக்கும் போதுதான் நமது பைஅத்தின் நோக்கம் முழுமையாகும். இதற்காக நாம் திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கமும் புரிவதன் பக்கமும் எப்போதும் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு மிகவும் சிறந்த வழிமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் நூல்களும் வழிகாட்டல்களும் ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் திருக்குர்ஆனுடைய அழகுகள் மற்றும் சிறப்புகளைக் குறித்து சில காலமாக நான் எடுத்துரைத்து வருகிறேன். திருக்குர்ஆன் முழுமையானது என்பதைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் இன்றும் எடுத்துரைப்பேன். திருக்குர்ஆனுடைய ஆட்சிக்கு முழுவதுமாக கட்டுப்பட்டு நடப்பேன் என்ற விஷயம் பைஅத்தின் பத்து நிபந்தனைகளிலும் உள்ளது. ஆகவே நம்மில் ஒவ்வொருவரும் இந்த ரமலானில் இந்த வழிகாட்டலின்படி செயலாற்றுவதற்கு தீர்மானித்துக் கொண்டால், நாம் நமது ஆன்மீகத்தில் முன்னேறுவது மட்டுமின்றி நம்முடைய சுற்றுச்சூழலும் சொர்க்கமயமான சுற்றுச்சூழலாக மாறிவிடும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோளை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:* மனித இயல்பில் எந்த அளவு சீர்கேடு ஏற்பட முடியுமோ, வழிகேட்டிலும் தீய செயலிலும் எந்த அளவுக்கு மனிதன் முன்னேறிச் செல்ல முடியுமோ அந்த அனைத்து சீர்கேடுகளும் திருக்குர்ஆன் மூலமாக சீர்செய்யப்பட்டன. ஆகவே எவ்வாறான காலத்தில் அவன் திருக்குர்ஆனை இறக்கினான் என்றால், மனித குலத்தில் இந்த அனைத்து சீர்கேடுகளும் உருவாகி விட்டிருந்தன. மேலும், கொஞ்சம் கொஞ்சமாக மனிதனின் நிலை எல்லாவித தீய கொள்கைகள் மற்றும் தீய செயல்களின் அசுத்தங்களை மேற்கொண்டு விட்டது. இவ்வாறான நேரத்தில் அவனுடைய முழுமையான வேதம் இறங்க வேண்டும் என்றே இறைவனின் ஞானம் விரும்பியது. ஏனெனில், சீர்கேடுகள் தோன்றுவதற்கு முன்பு அந்தக் குற்றங்கள் குறித்து, தீய கொள்கைகள் குறித்து அதை முற்றிலும் அறியாத மக்களுக்கு தகவல் கொடுப்பது என்பது, பாவங்களின் பக்கம் ஈர்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதைப் போன்றதாகும்.

அறிவு மற்றும் ஞானம் உடையவர்கள் மேலேதான் இருப்பார்கள். எப்படியென்றாலும் ஒரு சாதாரண மனிதனுக்கு சரிசமமாக இருக்க மாட்டார்கள். எந்தக் கூற்று இறைவனின் கூற்றாக இருக்குமோ அது மனித கூற்றைவிட மேன்மையாக இருக்க வேண்டியது அவசியமாகும். இறை ஞானம் ஒருபோதும் மனித கூற்றை ஒத்ததாக இருக்க முடியாது. ஆகவே, எல்லா விதத்திலும் முழுமையாக இருப்பதாக திருக்குர்ஆன் வாதிக்கிறது. இதற்குப் போட்டியாக இதுவரை எதுவும் வந்ததுமில்லை; இனி வரப்போவதுமில்லை. எவர்கள் இந்தத் தூய வேதத்திற்குக் கீழ்படிந்தார்களோ அவர்களிடத்திலேதான் அதன் அடையாளங்கள் வெளிப்படலாம். ஆகவே, திருக்குர்ஆனுடைய போதனையின்படி செயலாற்றக் கூடியவர்கள் மட்டுமே அசாதாரண அருள்களைப் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதும் திருக்குர்ஆனுடைய போதனையின் தனிச்சிறப்பாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆன் தன் சொற்செறிவையும் கருத்துச் செறிவையும் உண்மை மற்றும் உண்மையின் அவசியத்திற்கேற்ப இன்றியமையாத முறையில் செலுத்தியது. அனைத்து மார்க்க உண்மைகளையும் உள்ளடக்கி காட்டியது. அதில் ஒவ்வோர் எதிராளிக்கும் உண்மையின் சான்றுகள் நிரம்பி காணப்படுகின்றன. எந்த விவகாரங்களில் குழப்பத்தை காண்கிறதோ அதை சீர்படுத்த மட்டுமே அழுத்தம் கொடுத்துள்ளது. எல்லா வித, எல்லா வகை நோய்களுக்கும் மருத்துவத்தை எழுதியுள்ளது. பொய் மார்க்கத்தின் அனைத்து யூகங்களையும் அழித்துள்ளது. ஒவ்வோர் ஆட்சேபனைக்கும் பதில் அளித்துள்ளது. (அது) எடுத்துரைக்காத எந்தவோர் உண்மையும் (வெளியே) இல்லை. எந்தவொரு வார்த்தையும் தேவையின்றி இல்லை. எந்தவொரு விஷயமும் தகுந்த

சந்தர்ப்பம் இன்றி கூறப்படவில்லை. எந்தவொரு சொல்லும் வீணாக எடுத்துரைக்கப்படவில்லை. சொற்செறிவு எந்த அளவு முழுமையாக எடுத்து வைக்கப்பட்டுள்ளது என்றால், அதன் ஞானம் முன்னவர்கள் முதல் பின்னவர்கள் வரைக்கும் இந்த வேதத்தில் நிரப்பப்பட்டுள்ளது. அதன் போதனை எவ்வாறானதாக உள்ளது என்றால், அதன் விளக்கவுரை ஒவ்வொரு காலத்திலும் அதற்கேற்ப ஞானத்தை வழங்குகிறது. கொஞ்சம் சொற்களில் அறிவு நதியை ஓடச் செய்த இவ்வாறான நூலை யாராவது கண்டுள்ளீர்களா? வாருங்கள்! இந்த சிறப்புகளை நான் உங்களுக்குக் காட்டுகிறேன் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எல்லா மார்க்கங்களுக்கும் சவால் விடுத்தார்கள். (ஆனால்) இன்று வரை எவரும் இந்த சவாலுக்கு பதில் அளிக்கவில்லை. இதற்குப் பிறகும் கூட அஹ்மதிகளாகிய நம் மீது திருக்குர்ஆனை அவமதித்தல் எனும் பழி சுமத்தப்படுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நம்மைப் பொறுத்தவரை, திருக்குர்ஆனை முழுமையாகப் பின்பற்றுபவரே முஃமின் ஆவார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இரட்சிப்புக்காக அல்லாஹ் மீண்டும் மீண்டும் கூறிய விஷயம் என்னவென்றால், முதலில், அல்லாஹ்வை ஏகன் என்றும், அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்றும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான நபி என்றும் உறுதி கொள்ள வேண்டும். திருக்குர்ஆனை அல்லாஹ்வின் வேதமாக கருத வேண்டும்.

**திருக்குர்ஆனுடைய வஹீயின் மகிமை குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** கேளுங்கள்! திருக்குர்ஆனுக்கு ஒப்பான ஒன்றை கொண்டு வர இயலும் என்று வாதிப்பவர்கள் மீது இறைவனின் சாபம் உண்டாகட்டுமாக! திருக்குர்ஆன் அற்புதம் ஆகும். அதற்கு ஒப்பானதை எந்தவொரு மனிதனாலும் ஜின்னாலும் கொண்டு வர இயலாது. அதில் எவ்வாறான ஞானமும் சிறப்புகளும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது என்றால், அதை மனித அறிவு ஒன்று சேர்க்க இயலாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** என்னுடன் எந்தவோர் அடையாளமும் உதவியும் இல்லாதிருந்தால், திருக்குர்ஆனை விட்டு தனித்து வேறு வழியை நான் தேர்ந்தெடுத்திருந்தால் அல்லது (அதில்) ஏதேனும் விஷயத்தை நுழைத்திருந்தாலோ, இரத்து செய்திருந்தாலோ அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதை விட்டு வேறு வழியை தேர்ந்தெடுத்திருந்தாலோ, இந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரி ஆவார்; திருக்குர்ஆனுக்கு எதிரி ஆவார் என்று மக்கள் சாக்குபோக்கு கூறுவது அறிவுப்பூர்வமானதாக இருந்திருக்கும்! நான் திருக்குர்ஆனில் எந்தவொரு மாற்றத்தையும் செய்யவில்லை. ஷரீஅத்தில் எந்தவொரு குறியீட்டையும் மாற்றவில்லை. மாறாக, திருக்குர்ஆன், அதன் கட்டளைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய மார்க்கத்திற்குத் தொண்டு செய்யவே நான் மும்முரமாக ஈடுபட்டுள்ளேன்.

ஆக, இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாதமாகும். அன்னார் மூலமாகவே திருக்குர்ஆனுடைய ஞானங்கள் நம்வரை வந்தடைந்தன; அன்னார் நமக்கு உண்மையான ஞானத்தை வழங்கினார்கள் என்று நாம் நம்பிக்கை கொள்கிறோம். ஜமாஅத் மீது பழி சுமத்துபவர்கள் சிந்திக்க வேண்டும்! இவர்கள் திருந்தவில்லை என்றால் அல்லாஹ் இவர்களைப் பிடிக்காமல் விடப்போவதில்லை.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில் நீதியைக் குறித்து திருக்குர்ஆனின் கட்டளைகளைப்பற்றி எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:* **இந்த அடிப்படை விஷயங்கள்தான் உலக அமைதிக்கு உத்தரவாதம் அளிப்பவையாகும். உலகில் போர்களில் மூழ்கியுள்ள சமுதாயங்கள் இந்த அடிப்படை விஷயங்களைப் புரிந்து கொண்டால் அமைதி ஏற்பட முடியும். நீதி நிலைநாட்டப்படவில்லை என்றால் அழிவு நிச்சயமாகும்.**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் போதனை முழுமையானது என்று அறிவிப்பு செய்தவாறு, திருக்குர்ஆனுக்கு எதிராக, அதில் இல்லாத உண்மையை யாராவது எடுத்துக் காட்டினாலோ அல்லது வேறு ஏதேனும் நூலில் ஏதேனும் உண்மை அதை விடச் சிறந்த முறையில் எடுத்துக்கூறப்பட்டதாக நமக்குக் காட்டினாலோ நாம் மரண தண்டனையை ஒப்புக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறோம் என்று அறிவிப்பு செய்தார்கள்.**

**இன்று உலகில் ஏகத்துவம், இறை கண்ணியம், பரிபூரணத்தன்மைகள் ஆகியவை முழுமையாக உள்ள, இறைவனுடைய ஒரே வேதமாக திருக்குர்ஆன்தான் இருக்கிறது. திருக்குர்ஆன் இறைவன் மீது எந்தக் குறையையும் எடுத்து வைப்பதில்லை. பலவந்தமாக எந்தப் போதனையையும் ஒப்புக்கொள்ள வைப்பதில்லை. மேலும், மக்களுடைய சொல்லிலும் செயலிலும் உள்ள சீர்கேடுகளை சீர்செய்கின்றது. ஒவ்வொரு குழப்பமும் எவ்வாறு பரவிக்கிடக்கின்றதோ அதே போன்று அதைத் தடுக்கின்றது.**

**திருக்குர்ஆனை சரியான முறையில் ஓதக்கூடியவர்களாகவும், புரியக்கூடியவர்களாகவும், நம் நடை முறை வாழ்வில் அதை செயல்படுத்தக் கூடியவர்களாகவும் இருப்பதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! ரமலானில் திருக்குர்ஆனில் இருந்து பயன் பெற்றது போன்று ரமலானுக்குப் பிறகும் கூட அவ்வாறே பயனடைவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!**

*ஜுமுஆ குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ரமலானில் துஆவுக்காக கவனமூட்டியவாறு கூறினார்கள்:* **ஜமாஅத்துடைய எதிரிகளின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வொரு விஷமிகளின் கைகளையும் தடுப்பானாக! அவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வானாக!**

*அத்துடன், உலகின் பொதுவான நிலைகளுக்காகவும், பாலஸ்தீன முஸ்லிம்களுக்காகவும் குறிப்பாக துஆவுக்காக கவனமூட்டியவாறு, அல்லாஹ் அநீதியாளர்களின் அநீதியில் இருந்து அவர்களை காப்பாற்றுவானாக என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ
لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ
وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**